## அனைத்து வங்கிக் கிளைகளும் மக்களுக்கு மாற்றிக்கொடுக்க வேண்டிய கிழிந்த நோட்டுகளின் மாதிரி




**ரூபாய் 10, 20, 50, 100, 500, 1000 நோட்டுகளுக்கும் பொருந்தும்.**

# இந்திய ரிசர்வ் வங்கி

சென்னை



## பணம் வழங்கு துறை

**ISSUE DEPARTMENT**

Ph. : 044-25399163, 25399125

# கிழிந்த நோட்டா....?
# கவலை வேண்டாம்

அன்புடையீர்,

அழுக்கடைந்த மற்றும் கிழிந்த ரூபாய் நோட்டுகளை, உங்கள் அருகிலுள்ள எந்த வங்கிக் கிளையிலும் மாற்றிக் கொள்ளலாம். பொதுமக்களுக்கு சிரமத் தைப் போக்கும் வகையில் அனைத்து வங்கிக் கிளைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்துகிறது.

- அழுக்கடைந்த நோட்டுகளுக்குப் புதிய நோட்டுகள் கொடுத்தல்.
- சிறிய மதிப்பு இலக்க நோட்டுகள் வழங்குதல்
- இரண்டு துண்டாகாமல், முழுக் கிழிசல் இல்லாத நோட்டுகளுக்குப் பதிலாக நல்ல நோட்டுகள் அளித்தல்.
- வரிசை எண்களில் கிழியாமல், நெடுக்க அல்லது குறுக்க அல்லது பக்க வாட்டில் ஒரே கிழிசலாக இருந்து, நோட்டு இரு துண்டுகளாகி, ஒரே நோட்டைச் சேர்ந்தவையாக இருப்பின், அத்தகைய முழுக்கிழிசல் நோட்டுகளுக்குப் பதிலாக நல்ல நோட்டுகள் அளித்தல்.
- வரிசை எண்களில் கிழிந்திருந்தாலோ அல்லது சில பகுதிகள் இல்லாமலிருந்தாலோ பணக் கருவூலங்களுடைய (கரன்சி செஸ்ட்) வங்கிக் கிளைகளில் மாற்றிக்கொள்ளலாம்.

அல்லது

**உதவிப் பொது மேலாளர்,**
**கேட்புரிமைப் பிரிவு,**
இந்திய ரிசர்வ் வங்கி
சென்னை - 600001

என்ற முகவரிக்கு பதிவுக் காப்பீட்டுத் தபாலில் (Registered Insured Post) அனுப்புங்கள். உங்கள் வங்கிக் கணக்கு எண், வங்கிக் கிளை போன்ற விபரங்களையும் குறிப்பிட்டு எழுதுங்கள். நோட்டுகளின் மாற்று மதிப்பு, உங்கள் வங்கி கணக்கில் ரிசர்வ் வங்கியால் வரவு வைக்கப்படும்.

**சாதாரணத் தபாலிலோ குரியர் தபாலிலோ நோட்டுகளை அனுப்பாதீர்கள்.**

உங்கள் அருகிலுள்ள வங்கிக் கிளைகள் இச்சேவைகளைச் செய்ய, மறுத்தால்...

**வங்கிக் குறை தீர்ப்பாளர்**
**இந்திய ரிசர்வ் வங்கி**
16, இராஜாஜி சாலை,
சென்னை - 600 001.
தொலைபேசி :
044-25395964, 25399170
நகலனுப்பி : 044-25395488
URL : www.rbi.org.in.